DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 127 / 2024 |
| Deposition of witness | : | P. W– 1 |
| Name | : | ஹரிகிருஷ்ணன் |
| Father’s /Husband Name | : | அய்யப்பன் |
| Village | : | திருக்கண்டீஸ்வரம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 26 |
| Occupation | : | பட்டதாரி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 14th day August, 2025.
Accused absent petition U/sec. 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :-**

எதிரி கணேசன் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 22.10.2023–ம் தேதி காலை 08.00 மணியளவில் திருக்கண்டீஸ்வரம் மேலத்தெருவில் எனது அப்பா அய்யப்பன் பெயரில் உள்ள வீட்டிற்கு சென்று அந்த வீட்டில் பூட்டப்பட்டிருந்த பூட்டு சாவி தொலைந்துவிட்டதால் பூட்டை உடைத்துக்கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த எதிரி கணேசன் ஏன் பூட்டை உடைக்கிறடா குச்சிகாரி மவனே, தேவுடியா மவனே என தகாத வார்த்தைகளால் திட்டினார். பொதுமக்கள் மத்தியில் என்னை அசிங்கமாக திட்டியதால் எனக்கு அவமானம் ஏற்பட்டது. கம்பியால் எதிரி கணேசன் எனது தலையில் அடித்தார். தலையில் அடித்ததில் எனக்கு ரத்த காயம் ஏற்பட்டது. மேலும், அதே கம்பியால் எனது இடது பக்க தலை, இடது பக்க கண்ணம் மற்றும் இடது கையில் அடித்தார். அவ்வாறு அடித்ததில் எனக்கு வீக்க காயங்கள் ஏற்பட்டது. தலையில் எதிரி என்னை கம்பியால் தாக்கியதில் (சாட்சி தனது காயங்களை காண்பித்து சாட்சியமளித்தார்) எனக்கு காயம் ஏற்பட்டது. தடுக்க வந்த எனது தந்தை அய்யப்பனையும் எதிரி கணேசன் என்னை அடித்த அதே கம்பியால் வலது கையில் தாக்கினார். அதில் எனது அப்பாவிற்கு வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக நன்னிலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். நான் சிகிச்சையில் இருந்த போது நன்னிலம் போலிசார் வந்து விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் நன்னிலம் அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தேன். நான் தொடர்ந்து 15 நாட்கள் வரை சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனது அப்பா நன்னிலம் அரசு மருத்துவமனையில் தொடர்ந்து ஒரு வாரம் வரை சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலிசார் என்னை

விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :–

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.23 12:44:47 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 127 / 2024 |
| Deposition of witness | : | P. W– 2 |
| Name | : | அய்யப்பன் |
| Father's /Husband Name | : | கிருஷ்ணசாமி |
| Village | : | திருக்கண்டீஸ்வரம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 60 |
| Occupation | : | ஓய்வு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 14th day August, 2025.
Accused absent petition U/sec. 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :-**

எதிரி கணேசன் எனது தம்பி. அ.சா.1 ஹரிகிருஷ்ணன் எனது மகன். எனக்கு சொந்தமான வீடு திருக்கண்டீஸ்வரம் மேலத்தெருவில் உள்ளது. கடந்த 22.10.2023 ம் தேதி காலை 08.00 மணியளவில் திருக்கண்டீஸ்வரம் மேலத்தெருவில் உள்ள எனது வீட்டிற்கு சென்று அங்கு பூட்டப்பட்டிருந்த பூட்டு சாவி தொலைந்துவிட்டதால் பூட்டை எனது மகன் அ.சா.1 உடைத்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த எதிரி கணேசன் எனது மகனை குச்சிகாரி மவனே, தேவுடியா மவனே என தகாத வார்த்தைகளால் திட்டினார். கம்பியால் ஆஜர் எதிரி எனது மகனின் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். அதனை நான் தடுத்தபோது அதே கம்பியால் எனது வலது கையில் அடித்தார். அதில் எனது வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக நாங்கள் இருவரும் நன்னிலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். எனது மகன் மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்தார். இது சம்பந்தமாக நன்னிலம் போலிசார் வந்து விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.23 12:44:53 +0530